**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 92/2019**
**Deposition of witness for prosecution -PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுப்பிரமணி |
| Father Name | : | திரு. பஞ்சமுத்து |
| Village | : | அழகன்குளம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 12th day of May 2022.

முதல் விசாரணை.

நான் அழகன் குளத்தில் வசித்து வருகிறேன். வழக்கின் வாதி மாரி தற்போது இறந்துவிட்டார். எதிரிகளை தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்னால் நானும், ஆறுமுகம் என்பவரும் அழகன்குளம் கடையில் மது அருந்திகொண்டிருந்தோம். அப்போது மணி 12.30 இருக்கும் மாரி என்பவர் பாட்டு பாடிக்கொண்டிருந்தார். அப்போது 2 எதிரிகள் முருகானந்தம், இராமசாமி பைக்கில் வந்து என்ன பாட்டு பாடுகிறாய் என்று கேட்டார். வாக்குவாதம் முற்றி தள்ளுமுள்ளு ஆனது. அவர்கள் வேலை பார்த்து விட்டு வைத்திருந்த அருவாள் மற்றும் கம்பியை வைத்து கொண்டு சண்டை போட்டார்கள். அப்போது நாங்கள் விலக்கிவிட்டோம். அப்போது மாரிக்கு இடது பக்க காதில் இரத்தம் வந்துகொண்டிருந்தது. கம்பியை வைத்து தாக்கினார்களா, அல்லது அருவாள் வைத்து தாக்கினார்களா என்று தெரியாது. பின்னர் அவர் மருத்துமனைக்கு சென்றுவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் கு.வி

புகார்தாரர் மாரி என்பவர் என் உறவினரா என்றால் இல்லை. அவர் எங்கள் ஊர்காரர் ஆவார். அவரும், நாங்களும் வழக்கமாக குடிப்போம் என்றால் சரிதான். மாரி என்ன பாட்டு பாடினார் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அவர் ஜாதியை தூண்டும் விதமாக பாட்டு பாடினார் என்றாலும் அதனால் நான் அவரை அடித்தேன் என்றால் இல்லை. நான் சண்டையை தடுத்தேனா என்றால் விலக்கிவிட்டேன். அவர்கள் என்னை அடிக்கவில்லை. என்ன கலர் பைக்கில் அவர்கள் வந்தார்கள் என்றால் தெரியாது. நான் எவ்வளவு அளவு மது அருந்தினேனா என்றால் 1/2 க்கு மேல் சாப்பிட்டேன். அவர் எவ்வளவு சாப்பிட்டார் என்றால் தெரியாது. அவர் பாட்டு பாடும்போது தான் நான் வந்தேன். பைக்கில் வந்தவர்கள் சண்டை எதுவும் போடவில்லை என்றாலும் எங்களுக்குள்தான் சண்டை வந்தது என்றாலும் அதனால்தான் நான் ஆம்புலன்ஸ் வரும்போது சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. பைக்கில் வந்தவர்கள் ஆயுதம் எதுவும் வைத்திருக்கவில்லை என்றாலும் எங்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் அவருக்கு காயம் ஏற்பட்டது. எதிரிகள் யாரும் அவரை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் ஊரும் எங்கள் ஊரும் பக்கம் பக்கம் என்றால் சுமார் 3 கி.மீ இருக்கும். எங்கள் ஊருக்கும் எதிரியின் ஊருக்கும் ஒரே பேருந்துதான் என்றால் ஆமாம். பஸ்ஸில் இடம்

பிடிப்பதில் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது அதனால் எதிரிகள் மீது அவர் பொய்யான புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 92/2019**
**Deposition of witness for prosecution -PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஆறுமுகம் |
| Father Name | : | திரு. ஆறுமுகம் |
| Village | : | அழகன்குளம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 12th day of May 2022.

முதல் விசாரணை.

நான் அழகன் குளத்தில் வசித்து வருகிறேன். வழக்கின் வாதி மாரி தற்போது இறந்துவிட்டார். எதிரிகளை தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்னால் நானும், அ.சா.1 ம் அழகன்குளம் கடையில் மது அருந்திகொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னால் வாதி மது அருந்திக்கொண்டிருந்தார். அப்போது அவர் சிரித்துக்கொண்டிருந்தார். அப்போது மாரிக்கு அருகில் எதிரிகள் இருவரும் மது அருந்திக்கொண்டிருந்தார். ஏன் பாட்டு பாடுகிறாய் என்று சொல்லி முதலில் இருவரும் ஊமை அடியாக நெஞ்சு, கழுத்து, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார்கள். அப்போது மாரி கத்தினார். அப்போது முருகானந்தம் அரிவாளை வைத்துக்கொண்டும், இராமசாமி கத்தியை வைத்துக்கொண்டும் எதிரியை முருகானந்தம் அருவாளை வைத்துக்கொண்டு மாரியின் இடது பக்க தலையில் குத்திவிட்டார். கம்பியை வைத்திருந்த எதிரி இராமசாமி வலது பக்க தலையில் அடித்தார். எங்கள் இருவருக்கும் பார்க்க பரிதாபமாக இருந்தது. எதிரிகள் இருவரும் ஓடிவிட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் பனைக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் கு.வி

நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் அழகன்குளம் ஹோட்டலில் டீ மாஸ்டராக வேலை செய்கிறேன். மாரியும், நானும் ஒரே ஊர் காரர்கள் என்றால் சரிதான். அழகன்குளத்தில் இருந்து மதுக்கடை எவ்வளவு தூரம் என்றால் முக்கால் கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் வேலை செய்யும் கடை எத்தனை மணிக்கு திறப்பார்கள் என்றால் காலை 5 மணிக்கு திறந்து 12 மணிக்கு அடைத்துவிடுவோம். அதன் பின்னர் கடையை திறக்கமாட்டோம். கிராமத்தில் கடையை முழுநேரமாக திறந்திருப்பார்கள் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் அங்கு வியாபாரம் சரியாக இல்லாததால் சிக்கிரம் அடைத்துவிடுவோம். இப்போதும் அந்த கடை இருக்கிறதா என்றால் இருக்கிறது நான் அங்கு வேலைக்கு செல்லவில்லை. எதிரிகள் நான் பார்க்கும்போது அங்கு ஊக்காந்திருந்தார்களா அல்லது பைக்கில் வந்தார்களா என்றால் அவர்கள் பைக்கில்தான் வந்தார்கள் வந்தவுடன் அடித்துவிட்டார்கள். முதலில் கையில் அடித்துவிட்டு பின்னர் அவர்கள் பைக்கில் வந்து அடித்தார்கள். நான் நிறைய

குடித்திருந்தேனா என்றால் கொஞ்சமாகதான் குடித்திருந்தேன். நான் குடித்திருந்ததால் அங்கு என்ன நடந்தது என்று தெரியாமல் முன்னுக்கு பின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி என் ஊர்காரர் என்றாலும் அவரை பக்கத்தில் இருந்தவர் அடித்துவிட்டார். அவர் மீது புகார் கொடுக்காமல் பக்கத்து ஊர்கார்களான எதிரியின் மீது வாதி புகார் கொடுத்தார். அதற்காக நான் வழக்கில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. காயம் பட்டநபரை சம்பவம் இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்து மருத்துமனைக்கு ஏற்றி செல்லும்போது நான் அங்கிருந்து பார்த்தேன். சம்பவம் இடத்திற்கு 108 ஆம்புலன்ஸ் வரவில்லை என்றாலும் காயம் பட்ட நபர் தான் நடந்தே மருத்துமனைக்கு சென்றால் என்றால் இல்லை. அதனால்தான் நான் முன்னுக்கு பின்னாக முரணாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அரசியல் காழ்புணர்ச்சிக்காக பொய்யாக சாட்சி சொல்கிறார் என்றால் சரியல்ல.